**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**பாடக்குறியீட்டு எண் : 7BTAE2A**

**விருப்பப்பாடம் தாள் - 15 – கவின் கலைகள்**

<u>அலகு - I</u>

<u>அழகுக்கலை</u>

தமிழர்களுக்கென தனித்ததொரு கலை மரபுண்டு. இசை, ஓவியம், நாடகம், இலக்கியம், சிற்பம், கட்டிடம், ஆடல், ஒப்பனை என்று பலவகை கலைகள் உண்டு. அழகுக் கலைகளில் இசைக்கலை, காவியக்கலை இரண்டையும், பண்டைத் தமிழர் இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்தனர். காவியக் கலையை செய்யுள் நடையிலும், வசன நடையிலும் காவியம் படைத்தனர்.

அழகுக் கலைகள் ஐந்தையும், விரித்துக் கூறுமிடத்துக் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கூத்துக்கலை, காவியக்கலை, நாடகக்கலை என ஏழாகக் பகுக்கலாம்.

அழகுக்கலைகளைக் கண்களால் கண்டும் காதினால் கேட்டும் உள்ளத்தினால் உணர்ந்தும் மகிழலாம்.

கட்டிடக் கலையில்,

1. மரக்கோயில் (இதில் செங்கல் கட்டிடம் அமையும்)
2. குகைக்கோயில்
3. மாடக்கோயில் (மாமல்லபுரத்துக் கோயில்) என பிரிக்கலாம்.

<u>கோயில் வகைகள்:</u>

1. ஆலக்கோயில்
2. இளங்கோயில்
3. கரக்கோயில்
4. ஞாழற்கோயில்
5. கொடுபுக்கோயில்
6. மணிக்கோயில்
7. உயரமானகோயில்

<u>அலகு - II</u>

சிற்பக்கலை – மனிதர், விலங்கு, பறவை, தாவரம் முதலான உலகத்துப் பொருட்களின் வடிவத்தை, உருவத்தை அழகுற அமைப்பது, சோழர், பல்லவர் காலத்தில் சிற்பக்கலை சிறப்புற்று விளங்கியது. தெய்வ உருவங்களை சிற்பமாக அமைப்பதும் இதனுள் அடங்கும்.

அலகு - III

ஓவியக்கலை – சிற்பக்கலையை விட நுட்பமானது. உலகத்தில் காணப்படும் எல்லாப் பொருட்களின் உருவத்தையும், உலகில் காணப்படாத கற்பனைப் பொருள்களின் வடிவத்தையும் பலவித நிறங்களினாலே அழகுற எழுதப்படுகிற படங்களே ஓவியங்கள். தென்னிந்திய ஓவியம், சித்தனவாசல் ஓவியம், கயிலாசநாதர் ஓவியம், தஞ்சை பெரியகோயில் ஓவியம், நாயக்கர் கால ஓவியம் சிறப்புடையவை.

அலகு – IV

இசைக்கலை கண்ணால் காணமுடியாது. காதால் கேட்டு இன்புறத்தக்கவை. இசையில் ஆடலும் இதனுள் அடங்கும். பரத நாட்டியம், ஆடல் நயம், இசைக்கான கருவிகள் இவற்றுள் அடங்கும்.

அலகு – V

இலக்கியக்கலை, நாடகக்கலை கலைகளுள் அடங்கும். இலக்கியக் கலையில் சூளாமணி, சிந்தாமணியைக் கூறலாம். சங்க இலக்கியங்களுள் இலக்கியக்கலை நிறைந்துள்ளது. நாடகக்கலையில் நாடகத்திற்கென இலக்கணம், ஒன்பது வகை சுவையுடன் இணைந்ததாகும்.

இனிவரும் காலங்களில் இத்தகைய கலையை வளர்த்து, வாழ வைப்போம். இது நமது கடமையும் ஆகும்.

பார்வை நூல்: தமிழர் வளர்ந்த அழகுக் கலைகள்
மயிலை சீனி. வேங்கடசாமி
பாரிநிலையம் சென்னை.